# தேசிய திருவிவிலிய வினாடி வினா – 2026 (முதல்)

## கருப்பொருள்: விடுதலை அளிப்பவரான




## பிரிவு : தரம் 6 & 7

தேசிய மறைக்கல்வி நடுநிலையம்

# திருவிவிலிய வினாடி வினா - அட்டவணை

## தரம் 6 - கருப்பொருள்:

# விடுதலை தருபவரான கடவுள்

| தலைப்பு | பிரதான இறைவார்த்தை பகுதி | கற்றல் பேறுகள் | மேலதிக வசனங்கள் | நோக்கம் |
|---|---|---|---|---|
| யோசேப்பும் விடுதலைப் பயணமும் | தொ.நூ. 37: 45 - 47<br>வி.ப. 7 - 12 அதி.<br>வி.ப. 20 அதி. | கடவுள் தரும் விடுதலையை வரலாற்றினூடாக காணுவர். | வி.ப. 14:14<br>வி.ப. 6:7<br>யோவான் 8:36 | கடவுள் தனது மக்களை விடுதலை செய்கிறார். |
| புதிய மோசேயான இயேசு. | யோவான் 1:21,25,45<br>தி.ப. 3:22 - 26, 7:37 | விடுதலைக்கான கடவுளின் வாக்குறுதியை இயேசு நிறைவேற்றுகிறார் என அறிவர். | மத். 5:7<br>கலா. 5:1<br>யோவான் 14:6 | இயேசு அன்பினதும் மீட்பினதும் சட்டத்தைக் கொண்டு வருகிறார். |
| நம்பிக்கை அறிக்கை பகுதி 3 - 5 | திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை/ நிசேயா விசுவாச அறிக்கை | இயேசுவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் நம்பிக்கையை ஆழமாக்கிக் கொள்வர். | 1கொரி. 6:14<br>பிலி. 3:20<br>தி.ப. 2:24 | பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலை |
| ஒப்புரவு அருள-டையாளம் | யோவான் 20:19 - 23 | பாவத்திலிருந்து விடுதலையாக ஒப்புரவு அருளடையாளம் என ஏற்றுக்கொள்வர். | தி.பா. 145:8<br>தி.ப. 3:19<br>எசாயா 1:18 | இரக்கம், ஆன்ம விடுதலைக்கு வழிவகுக்கின்றது. |
| விடுதலையின் செபம் | தி.பா. 135<br>வி.ப. 15 அதிகாரம் | கடவுளின் மாபெரும் செயல்களுக்காகப் புகழ்பாடுவர். | தி.பா. 136:1<br>வி.ப. 15:2<br>தி.பா. 150:6 | கடவுளின் மீட்பு செயல்களுக்கு நன்றி கூறுதல். |



# திருவிவிலிய வினாவிடை - அட்டவணை

## தரம் 7 - கருப்பொருள்: விடுதலை தருபவரான கடவுள்

| தலைப்பு | பிரதான இறைவார்த்தை பகுதி | கற்றல் பேறுகள் | மேலதிக வசனங்கள் | நோக்கம் |
|---|---|---|---|---|
| இறைவாக்கினரின் செய்தி | எசாயா எரேமியா எசேக்கியேல் தானியேல் | கடவுள் தமது வார்த்தைகளின் மூலம் விடுதலையை வாக்களித்தார் என அறிவர். | தி.பா. 91:15 தி.பா. 146:7 கலா. 5:1 | இறைவாக்கினர் விடுதலையையும் நம்பிக்கையையும் அறிவிக்கின்றனர். |
| இயேசுவில் நிறைவேறுதல் | லூக்.4:18 - 20 குணப்படுத்தல், சக்கேயு, சமாரியப் பெண் | இயேசு குணப்படுத்தல் மற்றும் மன்னிப்பின் மூலம் விடுதலை அளிப்பவர் என நம்புவர். | மத். 11:28 லூக். 19:10 யோவான் 8:36 | கடவுளின் வாக்குறுதிகளை இயேசு வாழ்விற்கு கொண்டு வருகிறார். |
| நம்பிக்கை அறிக்கை பகுதி 3 - 5 | திருத் தூதர்களின் நம்பிக்கை அறிக்கை | இயேசுவின் வாழ்வு, மரணம், உயிர்ப்பில் நம்பிக்கை கொள்வர். | 1கொரி.15:3 - 4 தி.ப. 2:24 யோவான் 11:25 | விடுதலை வரலாற்றுடன் நம்பிக்கையை தொடர்புபடுத்துதல் |
| நோயில் பூசுதல் அருளடையாளம் | மாற்கு 6:13 யாக் 5:14 - 15 | இயேசுவின் மீதான நம்பிக்கையே துன்பத்திலிருந்து விடுதலை பெறல் மற்றும் குணமடைதல் என ஏற்றுக்கொள்வர். | வி.ப. 15:26 மத். 11:28 தி.பா. 103:3 | கடவுள் அமைதியையும் குணப்படுத்தும் அருளையும் தருகின்றார். |
| நம்பிக்கை செபம் | தி.பா. 29, 59 அதிகாரங்கள் | கடவுளின் வல்லமையில் நம்பிக்கை கொண்டு செபிப்பர். | தி.பா. 27:1 தி.பா. 46:1 தி.பா. 150:6 | நம்பிக்கை மற்றும் தைரியத்தை ஊக்குவிக்கின்றது. |



# தரம் 6 – விடுதலை தருபவரான கடவுள்

## 1. பொதுவான நோக்கங்கள்

- ☼ கடவுள் தம் மக்களை அடிமைத்தனம், பாவம் மற்றும் பாவத்தின் அச்சத்திலிருந்து விடுதலை தருபவர் என்பதை பிள்ளைகள் கண்டறிய உதவுதல்.
- ☼ பழைய ஏற்பாட்டு விடுதலை பயணத்தை, இயேசு கிறிஸ்துவே புதிய மோசே என்பதுடன் தொடர்புபடுத்தல்.
- ☼ ஒப்புரவு அருளடையாளத்தை, பாவத்திலிருந்து கடவுள் எமக்குத் தரும் விடுதலையாக விளங்கிக் கொள்ளுதல்.
- ☼ திருப்பாடல்கள் மற்றும் திருவிவிலிய விடுதலைப் பாடல்கள் மூலம் கடவுளைப் போற்றி புகழ கற்றுக்கொள்ளுதல்.

## 2. மறைக்கல்வியின் நான்கு தூண்கள்

### I. திருவிவிலியம் - கடவுளின் வார்த்தை

**பழைய ஏற்பாடு**

**1. யோசேப்பின் கதை (தொடக்க நூல் 37, 45 – 47 அதிகாரங்கள்)**

- ☼ யோசேப்பின் போதனைகள், மன்னிப்பு மற்றும் இறைபராமரிப்பு

**2. யோசேப்பின் கதை**

- ☼ 10 பெருந்துன்பங்கள் (வி.ப. 7 - 12 அதிகாரங்கள்)
- ☼ பாஸ்கா (வி.ப. 12 அதிகாரம்)
- ☼ 10 கட்டளைகள் (வி.ப. 20 அதிகாரம்)



**புதிய ஏற்பாடு**

**1. புதிய மோசேயான இயேசு.**

- ☼ யோவான் 1:21, 25, 45 அதிகாரங்கள்.
- ☼ தி.ப. 3:22 - 26, 7:37

**2. மலைப்பொழிவு (மலை பிரசங்கம்)**

- ☼ மத். 5 அதிகாரம்.

**கற்றல் பெறுபேறுகள்:**

- ☼ யோசேப்பின் கதை மற்றும் விடுதலைப் பயண நிகழ்வுகளை கூறுவர்.
- ☼ இயேசு, புதிய மோசேயாக கருதப்படுவது ஏன் என விளக்குவர்.
- ☼ மலைப்பொழிவை (எட்டு பேறுகள்) அன்பின் கட்டளைகளாக நினைவு கூறுவர்.

### II. நம்பிக்கை அறிக்கை - விசுவாசப் பிரமாணம்

**திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை: 3,4,5 பகுதிகள்**

**நிசேயா நம்பிக்கை அறிக்கை:** கிறிஸ்து மற்றும் மீட்பு பற்றிய உண்மைகளில் கவனம் செலுத்துதல்.



**கற்றல் பேறுகள்:**

- ☼ திருத்தூதர் நம்பிக்கை அறிக்கையில் 3 - 5 பகுதிகளையும் நிசேயா நம்பிக்கை அறிக்கையில் சில முக்கிய வரிகளையும் மனனம் செய்வர்.
- ☼ வரலாற்றில் கடவுளின் விடுதலை மற்றும் கிறிஸ்துவின் மீட்பை தொடர்புபடுத்துவர்

## III. அருளடையாளங்கள் - கிறிஸ்துவுக்குள் வாழ்வு

ஒப்புரவு அருளடையாளம் (யோவான் 20:23)



**கற்றல் பேறுகள்:**

☼ பாவத்திலிருந்து விடுதலையும், புதிய வாழ்வின் ஆரம்பமும் ஒப்புரவு எனக் காண்பர்.

☼ கடவுளின் இரக்கமானது விடுதலை மற்றும் சமாதானத்திற்கான கொடை எனப் புரிந்துக்கொள்வர்.

## IV. செபம் - புகழ்ச்சியும் நன்றியும்

☼ திருப்பாடல் 135 அதி. : கடவுளின் விடுதலை தரும் வல்ல செயல்கள்.

☼ விடுதலைப் பயணம் 15 அதி. : செங்கடலை கடந்த பின் மோசேயின் பாடல்.

**கற்றல் பேறுகள்:**

☼ தெரிவு செய்த வசனங்களை மகிழ்வுடனும் தைரியத்துடனும் ஒப்புவிப்பர்.

☼ விடுதலைக்கும் மன்னிப்பிற்கும் நன்றி கூறி கடவுளுக்கு சிறு செபம் ஒன்றை இயற்றி எழுதுவர்.

## 3. கற்றல், கற்பித்தலுக்கான பரிந்துரைகள்

☼ **கதை கூறுதல் :** யோசேப்பின் கதை, விடுதலைப்பயண நிகழ்வுகள், மலைப்பொழிவு

☼ **காண் சாதனங்கள் :** விடுதலைப்பயண வரைபடம், மோசேயை இயேசுவுடன் ஒப்பிடும் அட்டவணை

☼ **அபிநய பாடல் :** விடுதலைப்பயணம் 15 அதி. - பாடல், திருப்பாடல் 135 அதி.

☼ **ஆக்கச் செயற்பாடுகள் :**

- வரைதல்: செங்கடலை கடத்தல்
- எழுதுதல்: தனிப்பட்ட விடுதலைச் செபம் ஒன்று
- நடித்தல்: யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல்.

## 4. மதிப்பீடும் மீளாய்வும்

**மொத்த புள்ளிகள் : 100**

| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்து சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | தி.பா. 148 - நம்பிக்கை அறிக்கை | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | ஒப்புரவு அருளடையாளம், விடுதலைப்பயண நிகழ்வு | 20 |
| கிரகித்தல் சுற்று | படைப்பு/ நற்கருணை பற்றிய (“ஏன், எப்படி, என்ன, எதற்கு...”) காரணம் சார்ந்த வாய்மொழி வினாக்கள் | 20 |

### பரிசில் திட்டம்

- **தங்கம்** — 85–100
- **வெள்ளி** — 70–84
- **வெண்கலம்** — 50–69
- **சான்றிதழ்** — 50க்கு மேல்

## 5. தரம் 6 இன் இறுதியில் எதிர்ப்பார்க்கப்படும் பெறுபேறுகள்

- ☼ பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் இறைவன் விடுதலையளிப்பவர் என்பதை ஆழமாக புரிந்துகொள்வர்.
- ☼ பாவங்களிலிருந்து விடுவிக்கும் புதிய மோசேயாக இயேசுவை அடையாளம் காண்பர்.
- ☼ நம்பிக்கை அறிக்கையின் முக்கிய பகுதிகள் மற்றும் நிசேயா விசுவாச அறிக்கையுடனும் பரிச்சியமடைவர்.
- ☼ செபம், திருப்பாடலூடாக புகழ்தல், திருவிவிலிய பாடல் மீது விருப்பம் கொள்வர்.

## மேலதிக திருவிவிலிய பகுதிகள்: தரம் 6

### I. திருவிவிலியம் - கடவுளின் வார்த்தை

**(பிரதான பகுதி: யோசேப்பு கதை, விடுதலைப் பயண நிகழ்வு, மலை பிரசங்கங்கள்)**

- ☼ (வி.ப. 14:14) -“ஆண்டவரே உங்களுக்காக போராடுவார்; நீங்கள் அமைதியாய் இருங்கள்”
- ☼ வி.ப. 6:7 - “உங்களை நான் என் மக்களாக தேர்ந்தெடுப்பேன். உங்களுக்கு கடவுளாக நான் இருப்பேன்.”
- ☼ மத். 5:7 - “இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர்”.
- ☼ யோவான் 8:36 - “மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலைப் பெற்றவர்களாய் இருப்பீர்கள்”

இவை கடவுளின் விடுதலையின் வாக்குறுதியையும் அவரது பராமரிப்பானது இயேசுவின் அன்பின் கட்டளை - புதிய நீதி (சட்டம்) என்பவற்றையும் எடுத்துக் காட்டுகிறது.

### II. விசுவாச அறிக்கை - விசுவாச பிரமாணம்

**(பிரதான பகுதி: திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை பகுதிகள் 3–5, நிசேயா விசுவாச அறிக்கை)**

- ☼ “ஆண்டவரை உயிர்த்தெழச்செய்த கடவுள் தம் வல்லமையால் நம்மையும் உயிர்த்தெழச் செய்வார்” - 1கொரி. 6:14
- ☼ “அவர் இங்கே இல்லை, அவர் கூறிய படியே உயிருடன் எழுப்பப்பட்டார்.” - மத். 28:6
- ☼ “நமக்கோ விண்ணகமே தாய் நாடு: அங்கிருந்து தான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவார் என காத்திருக்கிறோம்” - பிலி. 3:20

இவை பாவத்திலிருந்து விடுதலையை; உயிர்ப்பு, முடிவில்லா வாழ்வு மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கை என்பவற்றுடன் இணைக்கின்றன.

### III. அருளடையாளங்கள் - ஒப்புரவு அருளடையாளம்

**(பிரதான பகுதி: யோவான் 20:23)**

- ☼ “வாருங்கள், இப்பொழுது நாம் வழக்காடுவோம்” என்கிறார் ஆண்டவர், “உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன: எனினும் உறைந்த பனி போல அவை வெண்மையாகும்” - எசாயா 1:18
- ☼ “எனவே உங்கள் பாவங்கள் போக்கப்படும் பொருட்டு மனம்மாறி அவரிடம் திரும்புங்கள்.” - தி.ப. 3: 19
- ☼ “ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்: எளிதில் சினம் கொள்ளாதவர். பேரன்பு கொண்டவர்” - தி.பா. 145:8

இவ்வசனங்கள், இறைவனின் இரக்கம், மன்னிப்பு என்பவற்றினூடாக நாம் பாவத்திலிருந்து விடுதலையாவதைக் காட்டுகின்றன.

**IV. செபம் - திருப்பாடல் 135 அதி. மற்றும் விடுதலைப் பயணம் 15 அதி.**

**(பிரதான பகுதி: திருப்பாடல் 135: விடுதலைப் பயணம் 15)**

- ☼ "ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர். என்றுமுள்ளது அவரது பேரன்பு" - தி.பா. 136:1
- ☼ "ஆண்டவரே என் ஆற்றல்: என் பாடல். அவரே என் விடுதலை: என் ஆண்டவர்." - வி.ப. 15:2
- ☼ "அனைத்துயிர்களே ஆண்டவரை புகழ்ந்திடுக" - தி.பா. 150:6

இந்த செபங்கள், கடவுளின் விடுதலை தரும் வல்லமைக்கான நன்றியையும் ஆராதனையையும் புகழ்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது.

## இவ்வசனங்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?

- ☼ **மனனம் செய்தல் :** பிரதான திருவிவிலிய வசனங்களுக்கு மேலதிகமாக வாரத்திற்க்கு ஒரு விருப்பு வசனம் மனனம் செய்வர்.

- ☼ **ஆக்கச் செயல்பாடுகள் :** ஒரு திருவிவிலிய வசனம் தமக்கு தரும் செய்தி என்ன என்பதை பிள்ளைகள் தாமாக எழுதுவர்.

- ☼ **வினாடி வினா தயாரித்தல் :** கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டோ வசனத்தின் அர்த்தத்தின் அடிப்படையில் குறு வினாக்களை தயாரிப்பர்.

- ☼ **செபவேளை :** மறைக்கல்வி வகுப்பின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் இவற்றை செபமாக பயன்படுத்துவர்.

# தரம் 7 – விடுதலை அளிப்பவரான கடவுள்

## 1. பொதுவான நோக்கங்கள்

- ☼ இறைவாக்கினர் மற்றும் இயேசுவின் பணி மூலம் கடவுளின் விடுதலையின் வல்லமையைப் பற்றிய புரிதலை ஆழப்படுத்துதல்.
- ☼ விடுதலையை ஆன்மீக குணப்படுத்துதல், மன்னிப்பு மற்றும் கிறிஸ்துவில் மீட்பு என்பவற்றுடன் தொடர்புபடுத்துதல்.
- ☼ நோயில் பூசுதல் அருளடையாளமானது இறைவனின் குணப்படுத்தும் தொடுகை என உணர்தல்.
- ☼ புகழ்ச்சி மற்றும் வேண்டுதல் திருப்பாடல்கள் மூலம் செபத்தில் நம்பிக்கையுடன் வளர்தல்.

## 2. மறைக்கல்வியின் நான்கு தூண்கள்




### I. திருவிவிலியம் - கடவுளின் வார்த்தை

**பழைய ஏற்பாடு – கடவுள் இறைவாக்கினர் மூலம் விடுதலை அளிப்பவர்.**

- ☼ எசாயா 61:1 - 2, 14:1 - 2
- ☼ எரேமியா 29:14, 31:33 - 34
- ☼ எசேக்கியேல் 34:22, 37:12 - 14
- ☼ தானியேல் 2:44, 6:27

**புதிய ஏற்பாடு – கிறிஸ்துவில் நிறைவு**

☼ லூக்கா 4:18 - 20 - இயேசு அருள் தரும் ஆண்டினை அறிவிக்கிறார்.

**இயேசுவின் மறை பணி –**

- தொழுநோயாளியை குணப்படுத்துதல். (மாற். 1:40 - 45)
- 'லேகியோன்' பேய்களை ஓட்டுதல் (மாற் 5:1 - 20)
- சமாரியப் பெண் (யோவான் 4:5 - 30)
- சக்கேயு (லூக். 19:1 - 10)

**கற்றல் பெறுபேறுகள்:**

- ☼ பிள்ளைகள், விடுதலை பற்றிய இறைவாக்குகளையும் அவை இயேசுவில் நிறைவேறியதையும் நினைவில் கொள்வர்.
- ☼ இயேசுவின் பணியில் நடைபெற்ற மனமாற்ற நிகழ்வுகள், குணமடைதல் போன்ற நிகழ்வுகளை விபரிப்பர்.
- ☼ பாவம், நோய், பயம் என்பவற்றிலிருந்து எம்மை விடுவிப்பவராக இயேசுவை இனங்காண்பர்.

### II. நம்பிக்கை அறிக்கை - விசுவாசப் பிரமாணம்

**உள்ளடக்கம் : திருத்தூதரின் நம்பிக்கை அறிக்கை – பகுதிகள் 3,4,5**

- ☼ பகுதி 3 "தூய ஆவியால் கருவுற்று கன்னி மரியாவிடம் பிறந்தார்".
- ☼ பகுதி 4 "போஞ்சியோ பிலாத்துவிடம் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார்".
- ☼ பகுதி 5 "அவர் பாதாளத்துக்கு இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்".

**கற்றல் பேறுகள்:**

- ☼ இப்பகுதிகளை மனப்பாடம் செய்து இலகு மொழியில் விளக்குவர்.
- ☼ இயேசுவின் வாழ்க்கை, இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் என்பன விடுதலைக்கு மையமாக இருப்பதை உணர்வர்.

## III. அருளடையாளங்கள் - கிறிஸ்துவுக்குள் வாழ்வு

**உள்ளடக்கம் : நோயில் பூசுதல்**



- ☼ மாற்கு 6:13 - "அவர்கள் நோயுற்ற பலருக்கு எண்ணெ பூசி அவர்களை குணமாக்கினர்"
- ☼ யாக்கோபு 5:14 - 15 "மூப்பர்களை அழைத்து... அவர்கள் மேல் எண்ணெ பூசி செபியுங்கள்"

**கற்றல் பேறுகள்:**

- ☼ நோயில் பூசுதலானது கடவுளின் குணமளிக்கும் அருளடையாளம் என புரிந்து கொள்வர்.
- ☼ துன்புறுவோருக்கு வலிமையும், அமைதியும், நம்பிக்கையையும் தரும் அருளடையாளம் என உணர்வர்.

## VI. செபம் - புகழ்ச்சி மற்றும் நம்பிக்கை

**உள்ளடக்கம்**

- ☼ திருப்பாடல் 29 அதி. - வல்லமையிலும் மாட்சியிலும் கடவுளின் குரல்.
- ☼ திருப்பாடல் 59 அதி. - கடவுளின் பாதுகாப்புக்கும் விடுதலைக்குமான செபம்.

**கற்றல் பேறுகள்:**

- ☼ கடவுளின் வல்லமைக்கும் பாதுகாப்புக்கும் புகழ்பாட கற்றுக்கொள்வர்.
- ☼ திருப்பாடல் 29 மற்றும் 59 அதிகாரங்களில் தெரிவு செய்த வசனங்களை பொருள்படக் கூறுவர்.

## 3. கற்றல், கற்பித்தலுக்கான பரிந்துரைகள்

- ☼ **கதை கூறுதல் :** இறைவார்த்தை செய்திகள், குணமளிக்கும் புதுமைகள், சக்கேயுவின் மனமாற்றம்
- ☼ **காண் சாதனங்கள் :** இறைவார்த்தைகள் நிறைவேறும் அட்டவணைகள், புதுமைகள் பற்றிய சுவரொட்டிகள்
- ☼ **அபிநய பாடல் :** விடுதலை மற்றும் குணமளிக்கும் பாடல்கள்
- ☼ **ஆக்கச் செயற்பாடுகள் :** வரைதல் - இயேசுவின் குணமளிக்கும் காட்சிகள்
  - எழுதுதல் - திருப்பாடல்களை அடிப்படையாகக் கொண்ட செபங்கள்
  - நாடகம் நடித்தல் - சக்கேயு/சமாரியப் பெண் இயேசுவை சந்தித்தல்.

## மதிப்பீடும் மீளாய்வும்

**மொத்த புள்ளிகள் : 100**

| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்துச் சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | தி.பா. 29 அல்லது 59 வசனங்கள் | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | இறைவார்த்தை நிறைவேறல், குணமளிக்கும் கதை | 20 |
| கிரகித்தல் சுற்று | குணமாக்கல் மற்றும் விடுதலை அளித்தல் பற்றிய காரணம் சார்ந்த வாய்மொழி வினா-க்கள் **("Why" Questions)** என்ன, ஏன் ... | 20 |

## பரிசில் திட்டம்

- தங்கம் — 85–100
- வெள்ளி — 70–84
- வெண்கலம் — 50–69
- சான்றிதழ் — 50க்கு மேல்

### 5. தரம் 7 இன் இறுதியில் எதிர்ப்பார்க்கப்படும் கற்றல் பேறுகள்

☼ விடுதலை தொடர்பான இறைவார்த்தைகள் மற்றும் இயேசுவின் குணமளிக்கும் பணியுடன் பரிச்சயமாவர்.

☼ இயேசுவின் இறப்பு உயிர்ப்பு என்பன மீட்பின் ஊற்று என்பதை அறிந்துகொள்வர்.

☼ நோயில்பூசுதல் என்பது அடிப்படையில் குணமளிக்கும் ஒரு அருளடையாளம் என அறிந்து கொள்வர்.

## மேலதிக திருவிவிலிய பகுதிகள்: தரம் 7

### I. திருவிவிலியம் - இறை வார்த்தை

**பிரதான பகுதி:**

☼ இறைவாக்கினர்கள் - எசாயா 61:1 - 2, 14:1 - 2, எரேமியா 29:14, 31:33 - 34, எசேக்கியேல் 34:22. 37:12 - 14, தானியேல் 2:44, 6:27

☼ நிறைவேறுதல் - லூக்கா 4:18 - 20

☼ இயேசுவின் தூதுப்பணி - மாற்கு 1:40 - 45, மாற்கு 5:1 - 20, யோவான் 4:5- 30, லூக்கா 19:1- 10

**மேலதிக மேற்கோள்கள்:**

1. “நான் உன்னை விடுவித்து மேன்மைப்படுத்துவேன் - தி.பா. 91:15
2. “ஆண்டவர் சிறைப்பட்டோரை விடுதலை செய்கிறார்” - தி.பா. 146:7
3. “கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார்” - கலா. 5:1

இப்பகுதிகள் கடவுளின் விடுதலை தரும் வல்லமையை, பாதுகாப்பை, இயேசுவினூடாக தரும் புதுவாழ்வை காட்டுகின்றன.

### II. நம்பிக்கை அறிக்கை - விசுவாச பிரமாணம்

**பிரதான பகுதி: திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை – பகுதிகள் 3, 4, 5**

**மேலதிக மேற்கோள்கள்:**

1. “கிறிஸ்து எமது பாவங்களுக்காக இறந்தார்... அடக்கம் செய்யப்பட்டார்... மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்” - 1கொரி 15:3 - 4
2. “உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” - யோவான் 11:25
3. “கடவுள் அவரை மரண வேதனையினின்று விடுவித்தார்” - தி. ப. 2:24

மேற்காணும் பகுதிகள், நம்பிக்கை அறிக்கையின் வார்த்தைகள், திருவிவிலியத்தில் வாழ்வின் வாக்குறுதிகள் மற்றும் நம்பிக்கையுடன் தொடர்புபடுத்த பிள்ளைகளுக்கு உதவுகின்றன.

## III. அருளடையாளங்கள் - கிறிஸ்துவில் வாழ்வு

**பிரதான பகுதி: நோயில் பூசுதல் அருளடையாளம்: மாற்கு 6:13; யாக்கோபு 5:14 – 15**

**மேலதிக மேற்கோள்கள்:**

1. “நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவர். ஆண்டவர் அவரை எழுப்பிவிடுவார்”. யாக். 5: 15
2. “நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்”. வி. ப. 15: 26.
3. “பெருஞ்சுமை சுமந்திருப்போரே எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்”. மத். 11: 28.

**கடவுளின் குணமளிக்கும் பிரசன்னத்தையும் துன்புறுத்துவோருக்கு இரக்கத்தையும் வேண்டுவர்.**

## IV. செபம் – புகழ்ச்சியும் நம்பிக்கையும்

**பிரதான பகுதி: திருப்பாடல்கள் 29, 59 அதிகாரங்கள்.**

**மேலதிக மேற்கோள்கள்:**

1. “ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு, யாருக்கு நான் அஞ்ச வேண்டும்?” - தி.பா. 27:1
2. “கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார். இடுக்கனுற்ற வேளைகளில் நமக்கு உற்ற துணையும் அவரே” - தி.பா. 46:1
3. “அனைத்து உயிர்களே ஆண்டவரை புகழ்ந்திடுக.” - தி.பா. 150:6

அவர்கள் பிள்ளைகளை, விடுதலை தரும் இறைவனுக்கு புகழ் பாடவும், நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் செபிக்க அழைப்பர்.

## மேலதிக மேற்கோள்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?

- **வாரத்துக்குரிய மனனம் செய்யும் பகுதி :** மறைக்கல்வியின் நான்கு தூண்களான திருவிவிலியம், அருளடையாளங்கள், நம்பிக்கை அறிக்கை, செபம் ஆகியவற்றில் எவையேனும் ஒன்றிலிருந்து ஒரு வசனம்.
- **செபவேளை :** குறிப்பிட்ட வசனங்களை அடிப்படையாகக் கொண்டு வகுப்பு ஆரம்பத்திலும் முடிவிலும் செபித்தல்.
- **சித்திரம்/நாடகம்:** குறிப்பிட்ட வசனங்களுக்கு பொருத்தமான காட்சிகளை விபரிக்கக் கூடிய வகையில் வரைதல் அல்லது நடித்தல்.
- **வினாடி வினா பகுதி :** சுருக்கமான இடைவெளி நிரப்புதல் அல்லது “யாரால் இது கூறப்பட்டது போன்ற வினாக்கள்.

**மேலதிக மேற்கோள்கள் உள்ளடக்குவதன் நன்மைகள்:**

- இறைவார்த்தை, நம்பிக்கை அறிக்கை, அருளடையாளங்கள் மற்றும் செபம் என்பவற்றில் ஒரே கருப்பொருள் இளையோடுகிறது.
- பிரதான பாடப்பகுதிகளுக்கு அப்பால் ஒரு ஆழமான ஆன்மீகத்தை வழங்குகிறது.
- ஆசிரியர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கு நெகிழ்ச்சியுடைய கற்பித்தல் உபகரணங்களை வழங்குகிறது.
- வினாடி வினா போட்டிக்கான ஆயத்தமானது வெறுமனே மனனம் செய்வதற்கு அப்பால் ஈடுபாட்டுடனும் செப மனநிலையுடனும் கற்று பலனடைய உதவுகிறது.

